திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் படித்த வேலையில்லாத பட்டதாரிகள் ஆயிரம் பேர்கள் அங்கே பதிவு செய்திருக்கிறார்கள். ஆகவே மைய அரசை, நமது டாக்டர் புரட்சித் தலைவி அரசு வற்புறுத்தி, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு, வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்பாக ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தில் ஏற்பட்ட மொத்தம் 70 காலி இடங்களை நிரப்புவதற்கு தஞ்சை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து 272 மனுதாரர்கள் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. 1991-ல் காயிதே மில்லத் மாவட்டம் உருவான பிறகு நாகப்பட்டினம் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம், ஓ.என்.ஜி.சி. நிறுவனத்திற்கு 13 காலியிடங்களை நிரப்பும் பொருட்டு 93 மனுதாரர்கள் பரிந்துரை செய்யப்பட்டனர். சில காலி இடங்களுக்கு தகுதியுள்ள மனுதாரர் இல்லாத நிலையில், பக்கத்தில் உள்ள மாவட்டத்தில் உள்ள மனுதாரர்கள் வேலைவாய்ப்பு மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 194, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

194--

கூட்டுறவு நியாய விலைக் கடைப் பணியாளர்களை நியமிக்க தனி தேர்வாணையம் அமைத்தல்

***23283-திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்குப் பணியாளர்களை நியமிக்க தனித்தேர்வாணையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1994 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன். கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்குப் பணியாளர்கள் நியமிக்க தனித்தேர்வாணையம் அமைக்க திட்டம் ஏதுமில்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்வாணையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அப்படி என்றால் நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் நபர்களை எப்படி பணி அமர்த்தம் செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் அதற்கு உள்ளடங்கிய விதிகளின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் விற்பனையாளர்களையோ அல்லது கட்டுனர்களையோ காலி பணியிடங்களுக்குத் தேர்வு செய்து அமர்த்த மாவட்டந்தோறும் தேர்வுக் குழு - ரெக்ரூட்மென்ட் பியூரோ ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மண்டல இணைப் பதிவாளர், பொது விநியோகத் திட்டத்தின் துணை பதிவாளர், மாவட்ட வழங்கல் அதிகாரி, கூட்டுறவு விற்பனைச் சங்கம் அல்லது கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை ஆகியவைகளின் தனி அலுவலர்கள் அந்தக் குழுவின் உறுப்பினர்கள் ஆகும். இக்குழுவில் அந்தந்த மாவட்டத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் ஏற்படும் காலி பணி இடங்களை நிரப்புவதற்கு தகுதிவாய்ந்த நபர்களை சம்பந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெற்றும் மற்றும் உள்ளூர் தமிழ் தினப்பத்திரிகைகளில் விளம்பரம் செய்து பெற்றும் விண்ணப்பதாரர்களுக்கிடையே நேர்காணல் தேர்வு நடத்தப்படுகிறது. அவ்வாறு நடத்தப்படும் நேர்காணல் தேர்வில் தகுதிவாய்ந்த நபர்களை தேர்வு செய்து அவர்கள் காலி பணி இடங்களுக்கு அமர்த்தப்படுகிறார்கள். இப்படி அமர்த்தப்படுகின்ற காலியிடங்களில்கூட தற்போது நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீட்டின்படி தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி வகுப்பினரை சார்ந்தவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் இன்னும் இவைகளில் சேராத அந்தத் தனிக் குழுவையும் சேர்த்து முன்னுரிமை அளித்து கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் விற்பனையாளர்கள் மற்றும் பணியாளர்கள் அமர்த்தப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[*1994 ஏப்ரல் 5*

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பணிபுரியும் ஊழியர்கள் கடைகளுக்கு வரும் மக்கள் பொருள்கள் விவரங்களைப் பற்றி கேட்டால் ஒழுங்கான தகவலைத் தருவதில்லை. எனவே, தேர்வாணையம் அமைக்கவில்லையெனினும், அவர்களுக்கு பயிற்சி அளித்து வேலையில் சேர அரசு ஆவன செய்யுமா? நியாய விலைக் கடைகளில் பணி புரியும் பணியாளர்கள் இப்போது பெறும் மாதச் சம்பளம் எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் விற்கப்படுகின்ற பொருள்களைப் பற்றிய விலைப்பட்டியல் அந்தந்த நியாய விலைக் கடைகளின் வெளியே அறிவிப்பு பலகைகள் மூலமாக போடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது நியாய விலைக் கடைகளில் பணியாற்றுபவர்கள் எவ்வளவு சம்பளம் பெறுகிறார்கள் என்ற ஒரு கேள்வியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தான் 350 ரூபாய் மாதச் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்த நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 1.3.1992 முதல் 500 என்று உயர்த்தி *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த 500 ரூபாயும், 1.4.1993 முதல் 600 ரூபாயாக உயர்த்தி *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுவும் போதாது என்று அந்த 600 ரூபாயும் 4 நாட்களுக்கு முன்பிருந்து அதாவது 1.4.1994 முதல் 750 ரூபாயாக உயர்த்திருயிக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த குறுகிய காலத்தில் மாதம் ஒன்றுக்கு 400 ரூபாயை உயர்த்திய பெருமை தமிழகத்தைக் காக்கும் கரங்களுக்குச் சொந்தமான நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கே உரித்தாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த 400 ரூபாய் அதிக தொகையோடு கடந்த தமிழர் திருநாளான பொங்கல் நாள் அன்று கருணைத் தொகையாக ஒவ்வொரு பணியாளருக்கும் 200 ரூபாயும் புரட்சித் தலைவி அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய, வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே தமது உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் நமது இதய தெய்வத்தின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு நியாய விலைக் கடைகளில் பணியாளர்கள்

1994 ஏப்ரல் 5]

பொறுப்பிடம் காலியாக இருக்கின்றன. எனவே, ஒரே பொறுப்பாளர் 2, 3 கடைகளுக்குக் கூடுதல் பொறுப்பு வகிக்கும் சூழ்நிலை இருந்து வருவதால் மக்களுக்கு நியாயமாக சென்று அடைய வேண்டிய பொருட்கள் தாமதம் ஆகியும், கடைகள் தாமதமாக திறக்கும் சூழ்நிலை ஏற்படுவதால் இதனைத் துரிதப்படுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல் அங்கே தேர்வு செய்து இந்தக் காலிப்பணியிடங்களை நிரப்ப மிக விரைவாக ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் அந்த நிலைமை இருந்து இருக்கலாம். ஆனால் காக்கும் கரங்களுக்குச் சொந்தமான மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் (மேசையைத் தட்டும் ஒலி) எந்தெந்த இடங்களில் காலியிடங்கள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் வெகு வேகமாகப் பூர்த்தி செய்யவேண்டுமென்ற அடிப்படையில் நான் முன்பு சொன்ன அந்த விதிமுறைகளின்படி மாவட்ட வேலைவாய்ப்பு துறையின் மூலமாகப் பெயர்களைப் பெற்று, பத்திரிக்கையின் மூலமாகப் பெயர்களைப் பெற்று வெகு வேகமாக இப்போது அந்த காலியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளுக்குப் பெண்கள் அதிகமாக வந்து பொருட்களை வாங்குகின்ற நிலைமை இப்போது இருக்கிறது. பெண்களின் உரிமையைக் காத்து வருகின்ற நமது இதய தெய்வத்தினுடைய ஆட்சியில் அங்கே நியாயவிலைக் கடைகளில் பெண்களைப் பணியாளர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நேற்றையதினம் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதே பதிலை நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். நியாயவிலைக் கடைகளில் பெண்களை அமர்த்தவேண்டுமென்ற எண்ணம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நீண்ட நாட்களாகவே (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, அதற்கான ஆணையை வெகு விரைவில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இசைவினைப் பெற்று, இந்த அரசு பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.